Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, NOVEMBER 24, 2022

வியாழக்கிழமை நவம்பர் 24, 2022 | ஒளி: 08 கதிர்: 150 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## “மனைவியை மீட்டு தாருங்கள்”

செந்துரன் பிரதீபன்



சவுதி அரேபியாவுக்கு பணிப்பெண்ணாக சென்ற தனது மனைவியை மீட்டுத்தருமாறு கோரி இளம் கணவர், யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கன்சீயூலர் அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு

# நீங்கள் சம்மதமா?



**இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13+ வழங்கவும் தயார்**

**அரசியல் கட்சிகளிடமும் கருத்துக் கேட்டார் ஜனாதிபதி**

ஆர்.யசி

நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப் பகிர்வை வழங்க சம்மதிப்பீர்களா என நேருக்கு நேர், சகல அரசியல் கட்சிகளிடமும் சபையில் வைத்தே கேள்வி எழுப்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீங்கள் சகலரும் தயார் என்றால் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளுடன் கலந்துரையாடத் தயார் எனவும் இனப்பிரச்சினைக்கு தீர்வாக 13 பிளஸை வழங்கத்தயார் எனவும் வாக்குறுதியளித்தார்.

தொடர்ச்சி P2



“13+ க்கு நானும் சம்மதம்



“இந்தியாவைப் போன்று வழங்குங்கள்



“சகல கட்சிகளையும் அழைத்து பேசுங்கள்



“அதிகார பகிர்வுக்கு முழு ஆதரவு”



“பேச்சுக்கு வாருங்கள்



## முதுகெலும்பு இருந்தால் தேர்தலை நடத்துங்கள்

இளைஞர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதாகக்கூறி உள்ளூராட்சி கட்டளை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் போர்வையில் தேர்தலை ஒத்தி வைப்பதற்கான சதித்திட்டங்களில் அரசாங்கம் ஈடுபடுவதாகவே தாம் கருதுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## “பாராளுமன்றத்தை கலைக்கமாட்டேன்”

பாராளுமன்றத்தை கலைக்க தான் தயாராக இல்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் அறிவித்தார். இளைஞர் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்திய பின்னர் தேர்தலுக்கு செல்லலாம் எனவும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

## தேர்தலை அறிவிக்காவிடின் நீதிமன்றம் செல்வோம்

திட்டமிடப்பட்டுள்ள திகதிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்படாவிட்டால், உயர்நீதிமன்றத்துக்குச் சென்று சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பஃப்ரல்) அமைப்பு தெரிவித்தது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி மேற்குறிப்பிட்ட விடயத்தை, நேற்று (23)

தொடர்ச்சி P2

## முத்துசிவலிங்கம் காலமானார்

டி.ஷங்கீதன், ஆ.ரமேஸ்.



மலையகத்தின் மூத்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும், முன்னாள் பிரதி அமைச்சருமான முத்துசிவலிங்கம், நேற்று (23) காலை காலமானார்.

தொடர்ச்சி P2

## இரட்டைக் குடியுரிமை கொண்டோர்

## திருமணம் செய்வதற்கு அனுமதி பெற வேண்டும்

வெளிநாட்டவர்களை திருமணம் செய்யும் இரட்டைக் குடியுரிமை கொண்ட இலங்கையர்கள் பதிவாளர் நாயகத்திடம் அனுமதி பெற வேண்டும் என்று பதிவாளர் நாயகம் பி.எஸ்.பி. அபேவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 89 நாள்களுக்கு பின்னர்

## பிணை பெற்ற தேரருக்கு மீண்டும் விளக்கமறியல்

கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தால் நேற்று (23) முற்பகல் பிணையில் விடுவிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான பிக்கு சம்மேளனத்தின் அழைப்பாளர் கல்வெவ சிறிதம்ம தேரர், மற்றொரு வழக்கில் எதிர்வரும் டிசெம்பர் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## 10 பேர் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மன்னாரில் இருந்து, படகு மூலம் புறப்பட்ட 2 குடும்பங்களைச் சேர்ந்த இலங்கை தமிழர்கள் 10 பேர், தனுஷ்கோடி வந்து இறங்கினர். பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்தவர்களின் எண்ணிக்கை 208 ஆக உயர்ந்துள்ளது.

## “ஏமாற்று நாடகத்தின் இரண்டாம் பாகம்”

அதிகாரப் பகிர்வு என்பது ஜனாதிபதிக்கு வெறும் அரசியல் பிரசாரம் மட்டுமே; இனப்பிரச்சினைக்கு தீர்வு எனக்கூறி சர்வதேசத்தை ஏமாற்றும் நாடகத்தின் இரண்டாம் பாகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



## மண்ணெண்ணெய் விநியோகம் இன்று வழமைக்கு திரும்பும்

மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகம் இன்று (24) முதல் முழுமையாக இயல்பு நிலைக்கு திரும்பும் என்றும் மண்ணெண்ணெய் விநியோகத்தில் நிலவுகின்ற தாமதத்தை எதிர்வரும் இரண்டு நாள்களில் முழுமையாக நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் ஜனாதிபதியின் பணிப்பாளர் நாயகம் (சமூக விவகாரப் பிரிவு) கீர்த்தி தென்னகோன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## பட்ஜெட்டுக்கு ஆதரவளித்த துமிந்தவுக்கு நடவடிக்கை



வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த திஸாநாயக்கவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னாள் ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வெலே சுதாவுக்கு எதிரான

## வழக்கில் டிசெ.9இல் சாட்சிய விசாரணை

மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டுள்ள ‘வெலே சுதா’ என்றழைக்கப்படும் கம்பொல விதானகே சமந்த குமாரவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் சாட்சிய விசாரணைக்கான தினமாக டிசெம்பர் மாதம் 9ஆம் திகதியை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, நேற்று (23) நிர்ணயித்தார்.

தொடர்ச்சி P2

## 627 – ‘விஜயபாகுவை’ ஜனாதிபதி கையளித்தார்



அமெரிக்க கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தால் இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்ட P 627 ஆழ்கடல் பாதுகாப்புக் கப்பல், ‘விஜயபாகு’ என்ற பெயரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் துறைமுக அதிகார சபைக்கு கையளிக்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் (22) மாலை கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தில் இடம்பெற்றது.

கடல் பிராந்தியத்தில் காணப்படும் பொதுவான கடல்சார் சவால்களை முறியடிக்கும் வகையில் கூட்டாண்மையை வலுப்படுத்தவும்,

தொடர்ச்சி P2

## ஆடைமாற்றிய ஆசிரியைகள் குறித்து உடனடி விசாரணை

சாறிக்கு பதிலாக சாதாரண இலகு ஆடைகளை அணிந்து பாடசாலைக்கு சமுகமளித்த ஆசிரியைகள் தொடர்பில் கல்வி அமைச்சு அறிக்கை கோரியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் உடனடியாக அறிக்கையை வழங்குமாறு அந்தந்த பாடசாலைகளின் அதிபர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நீங்கள் சம்மதமா?

பாராளுமன்றத்தில் நேற்று (23) விசேட உரை நிகழ்த்தியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டு, ஒருதாய் பிள்ளைகளாக நாம் வாழவேண்டும் என கூட்டமைப்பினர் கூறுகின்றனர். அதற்கு பிரதான எதிர்க்கட்சி தயாரா? லக்ஷ்மன் கிரியெல்ல நீங்கள் இணக்கமா என கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் தெரிவித்த கிரியெல்ல எம் பி, “அதிகார பகிர்வுக்கு நான் எப்போதுமே இணக்கம் தெரிவிக்கும் நபர். கண்டிய சிங்களவர்களே முதலில் இந்த நாட்டில் அதிகார பகிர்வை வலியுறுத்தினார். அதே நிலைப்பாட்டில்தான் நாம் இப்போதும் இருக்கின்றோம். இந்தியாவை போன்று இங்கும் அதிகார பரவலாக்கத்தை முன்னெடுக்க தயார்” என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, உங்கள் தலைவரின் நிலைப்பாடு என்ன என்பதை இன்றே அறிவியுங்கள் என்றார்.

அதேபோல் மனோ கணேசன் நீங்கள் இணக்கமா என எழுப்பிய கேள்விக்கு மனோ எம்.பி கூறுகையில், “அதிகார பகிர்வுக்கு ஐக்கிய மக்கள் முன்னணி தயாராகவே உள்ளது. அதனால்தான் நாம் இந்த அணியில் உள்ளோம்” என்றார். மீண்டும் கேள்வி எழுப்பிய ஜனாதிபதி, சுமந்திரன் உங்களின் நிலைப்பாடு என்ன என்றார். இதற்கு பதில் தெரிவித்த சுமந்திரன் எம்.பி, “இந்த விடயத்தில் சகல கட்சிகளையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்த நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என்றால் இது குறித்து இந்த ஆண்டு இறுதிக்குள் இறுதி முடிவை எட்ட முடியும்” என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய கிரியெல்ல.எம் பி, இது குறித்து உங்களின் நிலைப்பாட்டுக்கு அப்பால் உங்கள் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை கேளுங்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்ன? 13 பிளஸ் தருவதாக கூறினீர்கள், இப்போது நீங்கள் 13 பிளஸ்ஸுக்கு விருப்பமா? எனக்கேட்டார். இதற்கு மஹிந்த ராஜபக்ஷ, ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறு சிரித்துக்கொண்டு சம்மதம் என்பதற்கு அறிகுறியாக தலையை அசைத்தார்.

ஆனால், அத்துடன் விடாத லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி, தலையசைத்தால் போதாது. பாராளுமன்றத்தில் எழுந்து நின்று கூற வேண்டும் என்றார். இதனையடுத்து உடனடியாக எழுந்த மஹிந்த எனக்கு சம்மதம் என்றார்.

உடனடியாக பிரதமர் தினேஷ் குணவர்தன பக்கம் தனது கவனத்தை திருப்பிய கிரியெல்ல எம்.பி, பிரதமர் இதற்கு சம்மதிக்கின்றாரா எனக்கேட்டார். ஆனால் எந்தப்பதிலும் கூறாது பிரதமர் தினேஷ் குணவர்த்தன சிரித்தவாறு அமர்ந்திருந்தார். பார்த்தீர்களா பிரதமர் எப்போதும் அதிகாரப்பகிர்வுக்கு எதிரானவர். அவர் சம்மதிக்க மாட்டார் என்றார். இதன்போது அமர்ந்துகொண்டு பதில் தெரிவித்த பிரதமர், முதலில் பேச்சுவார்த்தைக்கு வாருங்கள், பேசுவோம் என்றார். இதன்போது, நாங்கள் 13 பிளஸ் தருவதற்கு தயார் எனவும், அப்படியானால் வரவு- செலவுத்திட்ட விவாதம் டிசெம்பர் 8 ஆம் திகதி முடிவடைந்த பின்னர் 12 ஆம் திகதிக்குள் ஒரு சந்திப்பை நாம் நடத்துவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## “மனைவியை மீட்டு தாருங்கள்”

அம்பாள் நகர் சாந்தபுரம் கிளிநொச்சி சேர்ந்த வடிவேல் லிங்கேஷ்வரன் என்ற இளம் குடும்பஸ்தர் இவ்வாறு தனது மனைவியை மீட்டுத் தருமாறு கூறுகிறார்.

திருமணம் செய்து ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளது. பொருளாதார நெருக்கடி காரணமாக ஏஜென்சி மூலம் தனது மனைவி மத்திய கிழக்கு நாடான சவுதி அரேபியாவிற்கு பணிப்பெண்ணாக சென்றுள்ளார்.

தற்போது அங்கு பல்வேறு துன்புறுத்தல்கள் ஒழுங்கான உணவு வழங்கப்படாமை போன்ற பல்வேறு துயரங்களை எதிர்கொண்டு வருவதுடன், குடும்பத்துடன் தொலைபேசியில் உரையாடுவதற்கும் அனுமதி மறுக்கப்படுவதாக பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்ததாக கணவர் தெரிவித்தார்

## முத்துசிவலிங்கம் காலமானார்

நீண்டநாள் நோய்வாய்பட்டிருந்த அவர், நுவரெலியாவிலுள்ள தனது இல்லத்தில் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 79ஆகும்.

நுவரெலியா மாவட்டத்தின் உடபுஸ்ஸல்லாவ டலோஸ் தோட்டத்தில் முத்துகருப்பன் வீராய் தம்பதிகளின் நான்காவது பிள்ளையாவார்.தனது ஆரம்பக் கல்வியை டலோஸ் தமிழ் வித்தியாலயத்திலும் பின்பு உயர் கல்வியை நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியில் கற்றவர்.

ராஜேஸ்வரியை திருமணம் முடித்த இவருக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு மகனும் இருக்கின்றனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் சாதாராண ஓர் உறுப்பினராக தன்னை 1959 இல் இணைத்துக் கொண்டு தனது தொழிற்சங்க அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் மிகவும் நம்பிக்கையை வென்று விசுவாசமிக்கவராக திகழ்ந்த அவர், சௌமியமூர்த்தி தொண்டமான் மறையும் வரையிலும் அவருடன் இணைந்து செயற்பட்டவர்.இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் பல்வேறு பதவிகளை வகித்ததுடன் இறுதியில் அதன் தலைவராகவும் இருந்து ஒய்வுபெற்றவர்.

தனது அரசியலை நுவரெலியா பிரதேச சபையின் நியமன தலைவராக ஆரம்பித்து படிப்படியாக பாராளுமன்ற உறுப்பினராக, பிரதி அமைச்சராக தனது அரசியலில் மிகவும் உச்ச நிலையை அடைந்தவர்.

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜயவர்தன, ரணசிங்ஹ பிரேமதாச, டி.பி. விஜேதுங்க சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய ஐந்து ஜனாதிபதிகளுடன் இணைந்து செயற்பட்டவர்.

## திருமணம் செய்வதற்கு அனுமதி பெற வேண்டும்

அந்த அனுமதியைப் பெறுவதற்கு இரண்டு தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் அவை இல்லாவிடின் திருமணத்துக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

திருமணத்துக்கு விண்ணப்பிக்கும் நபர், எந்தவொரு சட்ட அதிகாரியிடமிருந்தும் பிடியாணை பிறப்பிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்றும் தொற்று நோயால் பாதிக்கப்படாதவராக இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 10 மாதங்களில் 1,703 இலங்கையர்கள் பதிவாளர் நாயகத்தின் சம்மதத்துடன் வெளிநாட்டவர்களை திருமணம் செய்துள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளை திருமணம் செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, வெளிநாட்டவர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடையிலான திருமணங்களை பதிவு செய்வதில் உள்ள இடையூறுகளை நீக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன, பதிவாளர் நாயகத்துக்கு கடந்த 2ஆம் திகதி பணிப்புரை விடுத்திருந்தார்.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் குறித்த சுற்றறிக்கையை உடனடியாக இரத்து செய்யுமாறே பிரதமர் அறிவுறுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதுகெலும்பு இருந்தால் தேர்தலை நடத்துங்கள்

தேர்தலை ஒத்தி வைப்பதற்கு முயற்சிக்கவில்லை என்றால், முதுகெலும்புடன் தேர்தலை நடத்திக் காட்டுமாறு அரசாங்கத்துக்கு அவர் சவால் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) பிரதமரிடத்தில் கேள்வியெழுப்பி உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இளைஞர் பிரதிநிதித்துவத்தை 25 சதவீதமாக கொண்டு வருவதற்கான அமைச்சரவையில் உள்ளூராட்சி கட்டளை சட்டத்தில் திருத்தம் கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது. இளைஞர்களின் பிரதிநிதித்துவம் சிறந்த விடயமே. ஆனால், தேர்தல் நெருங்கும் நேரத்தில் ஏன் இவ்வாறான தீர்மானத்தை எடுக்க வேண்டும். தேர்தலை மேலும் காலம் தாழ்த்துவதற்கான தந்திரமாக இருக்கலாம் என்று கருதுகின்றோம் என்றார்.

இந்த அரசாங்கத்துக்கு உண்மையான மக்கள் ஆணை கிடையாது. ஆணை இல்லாத அரசாங்கம் தேர்தலை ஒத்தி வைக்க எவ்வாறு நடவடிக்கை எடுக்கலாம். இவ்வாறு செய்யாது முதுகெலும்புடன் தேர்தலை நடத்துங்கள் என்று நாங்கள் அரசாங்கத்தை கேட்கின்றோம். மக்களுக்கு அதற்கான வாய்ப்பை வழங்குங்கள். இதேவேளை லாபமடையும் நிறுவனங்களை விற்பதற்கு எவ்வாறு மக்கள் ஆணையில்லாத அரசாங்கத்தினால் தீர்மானம் எடுக்க முடியும் என்றும் கேட்டார்.

## “ஏமாற்று நாடகத்தின் இரண்டாம் பாகம்”

பாராளுமன்றத்தில் நேற்று (23) இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி,பிரதமர் அலுவலகம்,பாராளுமன்றம் உள்ளிட்ட 16 விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்ட அவர் மேலும் பேசுகையில்,

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அதிகார பகிர்வுக்கு தயாரா என எதிர்க்கட்சிகளை நோக்கி வினவி, நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு அதிகார பகிர்வு ஊடாக தீர்வு காண்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அதிகார பகிர்வுக்கு தயாரா என எதிர்க்கட்சிகளை நோக்கி வினவிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர் அருகில் அமர்ந்திருந்த பிரதமர் தினேஷ் குணவர்தன,முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வினவவில்லை. எதிர்க்கட்சிகளை தர்ம சங்கடத்துக்கு உள்ளாக்கும் வகையில்தான் ஜனாதிபதி செயற்பட்டார்.

## “பாராளுமன்றத்தை கலைக்கமாட்டேன்”

பாராளுமன்றத்தில் நேற்று (23) விசேட உரை நிகழ்த்தியபோதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

பொருளாதார ரீதியில் நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றது. இந்த நெருக்கடிகளுக்கு தீர்வுகண்ட பின்னர் ஏனைய விடயங்களை சிந்திக்கலாம் எனக் கூறிய அவர், நாட்டில் தேர்தலும் வேண்டாம், அரசியல் கட்சிகளும் வேண்டாம் என்ற மனநிலையில் பெரும்பாலான மக்கள் உள்ளனர் எனவும் கூறினார்.

தேர்தல் முறைமையில் மாற்றத்தை செய்து, இளைஞர் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்தி, நிவாரணங்களை கொடுத்த பின்னர் தேர்தலுக்கு செல்வோம். தேர்தலை நடத்த இப்போது எம்மிடம் பணமும் இல்லை. எனவே இவற்றை சிந்தித்துப்பாருங்கள் என்றார்.

## மண்ணெண்ணெய் விநியோகம் இன்று வழமைக்கு திரும்பும்

மீனவர்களுக்கான எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 74 மண்ணெண்ணெய் பவுசர்கள் நேற்று (23) விடுவிக்கப்பட்டுள்ளதாக கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

இதற்கமைய, 49 தனியார் துறை எரிபொருள் நிரப்பு நிலையங்கள், 18 கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் ஏனைய 07 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் தொடர்ந்து விநியோகிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அனுமதி வழங்கப்பட்டிருந்தும் பணம் செலுத்தாத காரணத்தால் நேற்றுமுன்தினம் (22) மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாத அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் நேற்று (23) மண்ணெண்ணெய் விநியோகிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கீர்த்தி தென்னகோன் மேலும் தெரிவித்தார். மேலும், இதுவரை மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாத 18 கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாகாண கூட்டுறவு ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களின் பரிந்துரையின் பேரில் இதற்கு தேவையான நிதி வசதிகள் கூட்டுறவு கிராமிய வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தேர்தலை அறிவிக்காவிடின் நீதிமன்றம் செல்வோம்

உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்படாவிட்டால் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஆவணங்களை பஃப்ரலை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணிகள் தயாரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் உள்ளிட்ட தேர்தலை ஒத்திவைப்பதற்கு தாம் ஆதரவாக இல்லை என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா தெரிவித்திருந்தார். 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 627 - "விஜயபாகுவை " ஜனாதிபதி கையளித்தார்

மேம்படுத்தவும் இந்தக் கப்பல் அமெரிக்க கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டது.

விசேட கடற்படை வாகனத் தொடரணியில் விழாவிற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடற்படையினரின் விசேட மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.

கப்பலை, அதிகார சபைக்கு கையளிப்பதற்கான பத்திரத்தை கட்டளை அதிகாரி கெப்டன் லங்கா திஸாநாயக்கவிடம் ஜனாதிபதி கையளித்தார். பின்னர் “விஜயபாகு” என பெயரிடப்பட்ட கப்பலின் பெயர்ப்பலகை மற்றும் உத்தியோகபூர்வ சின்னத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கப்பலை பார்வையிட்டதுடன், கப்பலின் நினைவுப் புத்தகத்தில் நினைவுக் குறிப்பையும் இட்டார்.

இதன்பின்னர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு கடற்படைத் தளபதி விசேட நினைவுப் பரிசையும் வழங்கி வைத்தார். *"Hamilton Class High Endurance Cutter"* வகை கப்பல்களுக்கு சொந்தமான இரண்டாவது கப்பல் என்ற வகையில், இலங்கை கடற்படைக்கு கிடைத்த இந்த கப்பல் 115 மீட்டர் நீளம் கொண்டது. அதிகபட்ச வேகம் மணிக்கு 29 கடல் மைல்கள் ஆகும். இந்தக் கப்பல் ஒரே நேரத்தில் குறைந்தது 14,000 கடல் மைல் தூரம் வரை கண்காணிப்பு பணியை மேற்கொள்ளும் திறன் கொண்டது.

## பட்ஜெட்டுக்கு ஆதரவளித்த...

ுழுக் கூட்டத்தில் தானும் கலந்து கொண்டதாக சுட்டிக்காட்டினார்.

கட்சியின் அதிகாரத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் கைப்பற்றுவாரா என்று ஊடகவியலாளரால் கேள்வியெழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரி, தனக்கு எந்த பயமும் இல்லை என்றும் யார் வேண்டுமானாலும் கட்சியில் சேரலாம் என்றும் குறிப்பிட்டார்.

கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில், முன்னாள் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிக்கா கட்சியின் முன்னாள் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா உட்பட சிலரின் கட்சி உறுப்புரிமையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

## வழக்கில் டிசெ.9இல் சாட்சிய விசாரணை

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதியில், பொரலஸ்கமுவ பிரதேசத்தில் அனுமதிப்பத்திரம் இன்றி ரி56 ரக துப்பாக்கி மற்றும் ரிவோல்வரை வைத்திருந்ததாக இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு நேற்று (23) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்திற் கொண்ட நீதிபதி, வழக்கின் சாட்சிய விசாரணைக்கு தினத்தை நிர்ணயித்தார்.

## பிணை பெற்ற தேரருக்கு மீண்டும் விளக்கமறியல்

பிணையில் விடுவிக்கப்பட்ட தேரரை வேறொரு வழக்குக்காக கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் சிறைச்சாலை அதிகாரிகள் ஆஜர்படுத்தியபோதே அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் கல்வியமைச்சுக்கு அருகில் இடம்பெற்ற போராட்டம் தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் நிபந்தனைப் பிணை

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 89 நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான பிக்கு சம்மேளனத்தின் அழைப்பாளர் கல்வெவ சிறிதம்ம தேரரை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ரி.என்.எல் மஹவத்த, நேற்று (23) நிபந்தனைப் பிணையில் விடுவித்தார்.

முகத்தை மறைத்து நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்ட சந்தேகநபருக்கு நீதவானின் பிரத்திகே அறையில் வைத்து பிணை வழங்கப்பட்டது.

## ஆடைமாற்றிய ஆசிரியைகள் குறித்து உடனடி விசாரணை

மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியர் பணியின் கண்ணியத்தை காக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு ஆசிரியருக்கும் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். பாடசாலைக்கு வருகை தரும் போது, ஆசிரியர்கள் பாரம்பரியமாக பின்பற்றும் நடைமுறைகளை குறித்த ஆசிரியைகள் ஏன் கடைப்பிடிக்க தவறினார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அரச ஊழியர்களின் ஆடை குறித்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கை பாடசாலை ஆசிரியர்களுக்கு பொருந்தாது என்று அமைச்சின் செயலாளர் கே.பி. மாயாதுன்னே அறிவித்திருந்தார்.



பாராளுமன்றத்தில் சமர்க்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தின் மீதான குழு நிலை விவாதம் நேற்று (23) ஆரம்பமானது.

# அமைச்சர் பதவியை இராஜிநாமா செய்வேன்



எதிர்வரும் வருடம் நாட்டுக்கு மாணிக்கக்கல் ஏற்றுமதி மூலம் 500 மில்லியன் டொலர் வருமானத்தை பெற்றுத் தருவேன். இல்லையென்றால் அமைச்சர் பதவியை இராஜிநாமா செய்வேன் என ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் திஸாநாயக்க சூளுரைத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) கருத்தொன்றை முன்வைத்தபோதே இவ்வாறு சூளுரைத்த அவர் மேலும் கூறுகையில், ஒரு பில்லியன் டொலர் மதிப்புள்ள இரத்தின கற்கள், நாட்டை விட்டு வெளியே போயுள்ளன. ஆனால் 170 மில்லியன் டொலர் மட்டுமே நாட்டிற்கு கிடைத்துள்ளது. இந்த நிலையில், இதுகுறித்து ஆராய்ந்து வருகின்றேன். 180 நாள்களுக்குள் நாட்டுக்குள் டொலர் வரவேண்டும். அது மட்டுமல்ல, அடுத்த ஆண்டு மாணிக்கக்கல் ஏற்றுமதி மூலம் நாட்டிற்கு 500 மில்லியன் டொலர் வருமானத்தை பெற்றுத்தருவேன். அவ்வாறு இல்லாவிட்டால் அமைச்சர் பதவியில் இருந்து இராஜிநாமா செய்வேன் என்றார்.

# சகலரும் திருப்தியடையும் தீர்வையே ஏற்றுக்கொள்வோம்

இனப்பிரச்சினை விடயத்தில் அனைத்து மக்களும் திருப்தியடையும் தீர்வையே நாங்கள் ஏற்றுக்கொள்வோம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதன்போது அவர் மேலும் கூறுகையில்,

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வசிப்பு மீதான வாக்கெடுப்பில் எதிராக வாக்களிக்கவே முதலில் தீர்மானித்தோம். ஆனால், பின்னர் எதிராக வாக்களிப்பதில்லை என்ற தீர்மானத்தை எடுத்தோம். ஏனென்றால் ஜனாதிபதி கடந்த நாள்களில் பல சந்தர்ப்பங்களில் தமிழ் தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்தினார். தமிழ்க் கட்சிகளுக்கு கலந்துரையாடுவதற்காக அவர் அழைப்பு விடுத்திருந்தார்.



இதன்படி ஜனாதிபதிக்கு பதிலளித்து அவருக்கு எங்களின் நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்காக நாங்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

உறுதிப்படுத்தும் போதே நல்லிணக்கம் ஏற்படும். உண்மைகளை மூடி மறைத்தால் நல்லிணக்கம் ஏற்படாது. இந்நிலையில் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டு வருடங்கள் பல ஆகின்றபோதும் ஒரு விசாரணைகள் ஏதும் நடக்கவில்லையே. சொற்கள் செயற்பாடுகளில் இருக்க வேண்டும். காணிகளை விடுவிப்பதாக அரசாங்கம் கூறியது. பலாலி விமான நிலையத்தை சுற்றி காணிகளை விடுவிப்பதாக கூறிய போதும் அதனை நிறைவேற்றவில்லை. ஒருபுறத்தில் நல்லிணக்கம், மீள்குடியேற்றம் தொடர்பில் கூறுகின்ற போதும், மறுபுறத்தில் அதற்கு எதிரான விடயங்கள் நடக்கின்றன. அதனை விசாரிப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அதனை நாங்கள் வரவேற்கின்றோம் என்றார்.

# நாங்கள் இடையூறுகளை ஏற்படுத்தியதில்லை



தேர்தல்கள் ஆணைக்குழுவின் உரிமைகளில் நாங்கள் இடையூறுகளை ஏற்படுத்தியதில்லை. தேர்தல் சட்டங்களில் திருத்தம் மற்றும் செலவுகளை குறைத்தல் உள்ளிட்ட விடயங்களில் நாங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இதனை தெரிவித்தார். அதன்போது பிரதமர் கூறுகையில்,

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான செலவுகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு முன்வைத்துள்ள விடயங்களை அனுமதித்து அது தொடர்பான சட்டத்தை நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டது. நாங்கள் ஜனநாயக ரீதியலான தேர்தலுக்கு அவசியமான சட்ட திட்டங்களை ஏற்படுத்தவே முயலுகின்றோம். இவை தேர்தலுக்கு நன்மையான வகையிலேயே அமையும் என்ற போதும், அதில் வேறு தாக்கத்தை ஏற்படுத்தாது என்பதனை கூறிக்கொள்கின்றேன்.

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான எல்லை நிர்ணய குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் வர்த்தமானியை ஆராய்ந்து உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு அனைவரும் இணங்கியுள்ளோம் என்றார்.

சகல போக்குவரத்து சேவைகளையும்

# ஒரு டிஜிட்டல் தளத்துக்கு கொண்டுவர அவதானம்



ரயில், பஸ், பாடசாலை வாகன சேவை, டக்சி சேவை போன்ற நாட்டில் உள்ள சகல போக்குவரத்து சேவைகளையும் ஒரே டிஜிட்டல் தளத்திற்குக் கொண்டு வருவதனூடாக பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக தலைமையில் கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

போக்குவரத்துத் துறையினர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டதுடன், போக்குவரத்துத் துறையில் தற்பொழுது காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவர்கள் கருத்துகளை முன்வைத்தனர். எரிபொருள் விலை அதிகரிப்பு, வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் போன்றவற்றால் தமக்குக் கடுமையான சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாக இதில் கலந்துகொண்டிருந்த தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், ஓட்டோ உரிமையாளர் சங்கம், பாடசாலை வான் உரிமையாளர் சங்கம் உள்ளிட்ட போக்குவரத்துத் துறையின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

சபையிலிருந்து

# வெளியேற்றப்பட்டார் சமிந்த விஜேசிறி



எதிர்க்கட்சி வரிசையில் சுயாதீனமாக இயங்கும் குழுவை சேர்ந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா மீது தாக்குதல் நடத்த முயன்றதாக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் சமிந்த விஜேசிறி, சபையில் இருந்து சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவால் வெளியேற்றப்பட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக எழுந்த சர்ச்சையின் போது, நிமல் லான்சாவுக்கும் சமிந்த விஜேசிறிக்கும் இடையே ஏற்பட்ட முறுகல் நிலைமையை தொடர்ந்து, சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த விடுத்த கோரிக்கைகளை தொடர்ந்தே சமிந்த விஜேசிறி சபையில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான

# ஔடதங்கள் சட்டம் நடைமுறைக்கு வருகிறது

பாராளுமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்தச்) சட்டமூலம் நேற்று (23) முதல் 2022ஆம் ஆண்டு 41ஆம் இலக்க நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்தச்) சட்டமாக நடைமுறைக்கு வருகிறது. இதற்கான சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப் படுத்தினார்.

நீதி, சிறைச்சாலைகள் விவகார மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சால் செப்டெம்பர் 09ஆம் திகதி நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தின் ஊடாக நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் குறித்த சட்டம் திருத்தியமைக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தின் திருத்தமானது, போதைப்பொருள்களை வைத்திருப்பது மற்றும் நாட்டுக்கு கொண்டுவரப்படுவதைத் தடுக்கும் வகையில் காலத்துக்கு ஏற்ற வகையில் சட்டத்தைப் புதுப்பித்து வலுப்படுத்தப்படவுள்ளது.




இராணுவத்தையும் அவசரகால சட்டத்தையும் பயன்படுத்தி

# அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தை தடுப்பேன்

அரசாங்கத்தை மாற்ற இன்னொரு போராட்டத்தை நடத்த திட்டமிடப்படுவதாக அறிய முடிகின்றது. அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டேன். இராணுவத்தையும் அவசரகால சட்டத்தையும் பயன்படுத்தி, போராட்டத்தை தடுப்பேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) விசேட உரை நிகழ்த்தியபோதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் வன்முறைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. அரசியல் முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் அதற்காக எவரதும் உயிரையும் பறிக்க முடியாது. அந்தக் கலாசாரத்தை உருவாக்க அனுமதிக்க முடியாது. ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் அவர்களின் வீடுகளை தீவைக்க இடமளிக்க முடியாது. இந்தக் கலாசாரம் தொடர்ந்தால் எதிர்காலம் மோசமானதாக அமையும். ஜனாதிபதி மாளிகை, செயலகத்தை ஆக்கிரமித்து நாசமாக்கினர். எனது வீட்டையும்



எரித்தனர். அதன் பின்னர் பாராளுமன்றத்தை கைப்பற்றவும் முயன்றனர். பாராளுமன்றத்தை கைப்பற்றியிருந்தால் என்னவாகியிருக்கும்? அடுத்ததாக நீதிமன்றத்தை கைப்பற்றியிருப்பார்கள். இதற்கு பின்னால் செயற்பட்டது யார்? குமார் குணரத்னவும் முன்னிலை சோஷலிச கட்சியுமே இவற்றை செய்தனர் எனக் குறிப்பிட்டார்.

பசில் ராஜபக்ஷ இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர். அவரை வெளியேற்ற வேண்டும் என முன்னிலை சோஷலிச கட்சி எவ்வாறு கூறமுடியும். அக்கட்சியின் தலைவரும் இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்தானே! பசிலை விரட்டிவிட்டு குமார் குணரத்னவை ஆட்சிக்கு கொண்டுவர முடியுமா? அனைவருக்கும் கூறுவது ஒன்றுதான், எந்தவித அடக்குமுறைக்கும் கட்டுப்பட வேண்டாம்.

'என்னைப்போல் சர்வாதிகார உலகில் வேறெங்கும் இல்லை. இன்று நான் ஒரு ஹிட்லர் போன்று மாறிவிட்டேன்' என்று சர்வதேச ஊடகங்கள் என்னை சித்திரித்துவிட்டன. விமர்சியுங்கள்! ஆனால் மக்களுக்கு இடையூறு செய்வீர்கள் என்றால் அதனை நான் தடுப்பேன். போராட்டத்திற்கு நான் இடமளிக்க மாட்டேன் எனக் குறிப்பிட்டார்.

# நாட்டுக்குள் பாரிய புரட்சி ஏற்படும்

உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தால், பாரிய புரட்சியொன்று நாட்டுக்குள் ஏற்படும். அவ்வாறானதொரு புரட்சி ஏற்பட்டால் அதில் நாங்களும் பங்கேற்போம் என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எச்சரித்தார்.

தேர்தல் என்பது அரசிற்கு தவறுகளை திருத்திக்கொள்வதற்கான சந்தர்ப்பமாகும். தேர்தல் மறுசீரமைப்பு நடவடிக்கையை காரணம் காட்டி தேர்தலை பிற்போடக்கூடாது என அரசுக்கு தெரிவிக்கின்றோம். மறுசீரமைப்பு நடவடிக்கை 10 வருடங்களாக பிரதமர் தினேஷ் தலைமையில் இடம்பெறுகின்றது. இன்னும் நிறைவடையவில்லை. அதனால் தேர்தலை பிற்போட முயற்சிக்கவேண்டாம் அது தேசிய ரீதியில் மாத்திரமன்றி சர்வதேச ரீதியிலும் பிரச்சினையை ஏற்படுத்தும்.

எனவே அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்கு பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறு செயற்பட்டால் நாட்டில் பாரியதொரு புரட்சி ஏற்படும். அவ்வாறான புரட்சி ஏற்பட்டால் விருப்பம் இல்லாவிட்டாலும் அதில் நாங்களும் பங்கேற்போம். அத்துடன் பாராளுமன்ற பிரேரணை ஒன்றின் மூலம் தேர்தலை பிற்போட முடியாது. உரிய காலத்தில் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுழுவுக்கு உள்ளது என்றார்.

# “எங்கள் கடலை சீனாவுக்கு தாரைவார்க்கும் சதி”

## பூநகரி பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

பாரம்பரிய தொழிலைப் பாதிக்காதவாறு, கடலட்டை பண்ணைகள் அமைப்பதற்கான துறைசார் ஆய்வுகளை மேற்கொண்டு, சட்டவிரோத கடலட்டை பண்ணைகளை அகற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, பூநகரி பிரதேச சபையில் தீர்மானம் திங்கட்கிழமை (21) நிறைவேற்றப்பட்டது.

பூநகரி பிரதேச சபையின் அமர்வு, சபையின் தவிசாளர் சிவகுமாரன் சிறீரஞ்சன் தலைமையில் ஆரம்பமாகிய போது, கடலட்டை பண்ணைகள் தொடர்பான தீர்மானத்தை சபையின் தவிசாளர் தனது தனிப்பிரேரணையாகக்கொண்டு, ஏக மனதாக நிறைவேற்றுமாறு பிரேரணையை வாசித்து சபையைக் கேட்டுக்கொண்டார்.

பூநகரியின் மேற்கு கடலின், பெரும்பாலான பகுதிகளில் கடலட்டை பண்ணைகள் காணப்படுகின்றன. யார் என்று இங்குள்ளவர்களுக்குத் தெரியாதவர்களுக்கு, ஏக்கர் கணக்கில் வழங்கப்படுகிறது. சட்டவிரோதமாக வழங்கப்படுகிறது. இதனால் பாரம்பரிய தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களாகிய நாம், எங்களுக்கான காணி உரிமைக்காக போராடிக்கொண்டிருக்கும் வேளையில், சந்ததிகளாக வாழ்வாதாரத்துக்கு கடலை மட்டும் நம்பியிருக்கும் மக்களை, கடலில் இருந்து அந்நியப்படுத்தி எங்கள் கடலை, கடலட்டை பண்ணை என்ற போர்வையில் சீனாவுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தாரைவார்க்கும் சதியை பூநகரி பிரதேச சபை வன்மையாக கண்டிக்கிறது.

கடலட்டை பண்ணைகளின் தீமை பற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு முடிவு வரும் வரையும் சட்டவிரோத கடலட்டை பண்ணைகளை அகற்றுமாறு அரசாங்கத்தை கோருகின்றோம் என்றார்.

இரண்டு உறுப்பினர்கள் குறித்த தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்த நிலையில், ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# சைவசமயம் சார்ந்த போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரல்

■ எஸ். தில்லை

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், அறநெறிப் பாடசாலை மாணவர்கள், திறந்த மட்ட போட்டியாளர்கள் (18-30வயது) ஆகியோர் மத்தியில் நான்கு மாகாணங்களில் சைவ சமயம் சார்பான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் பண்ணிசை, தொண்டுபாடும் செயன்முறை, புராண படனம், கதாப்பிரசங்கம், மிருதங்கம், வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகளும் திறந்த மட்டப் போட்டிகளாக புராண படனம், கதாப் பிரசங்கம், மிருதங்கம், வில்லுப்பாட்டு, மேடை நாடகம் ஆகிய போட்டிகளையும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 30/11/2022 முன்பாக தமது விண்ணப்பங்களை saivappulavarsangam1960@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது சைவப்புலவர் சி.கா கமலநாதன், தலைவர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், இல 610 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.



### செம்மணி நீரேந்து பிரதேசத்தை

# மேடாக்குவதால் சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், செம்மணி யாழ். வளைவு பகுதியை சூழவுள்ள நீரேந்து பகுதிகளாக உள்ள சதுப்பு நிலங்களை கற்கள், மண், கட்டட இடிபாடுகள் என்பவற்றை கொட்டி அப்பகுதியை மேடாக்கும் வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

குறித்த நீரேந்து பிரதேசத்தை மேடாக்கும் நடவடிக்கையால், அயலில் உள்ள வயல்களில் நீர் தேங்கி நிற்பதால், வயல்கள் அழிவடையும் நிலைமை காணப்படுகிறது.

ஏற்கெனவே, இந்தப் பகுதிகளில் விஷமிகள் குப்பைகளையும் கழிவுகளையும் கொட்டி வருவதால் சதுப்பு நில தாவரங்கள் அழிவடைந்து வரும் நிலையில், தற்போது அப்பகுதிகளில் கற்கள், கட்டட இடிபாடுகளைக் கொட்டி வருவதால், சதுப்பு நிலங்கள் முற்றாக அழிவடையும் ஆபத்து உள்ளது என சுற்றாடலைப் பாதுகாக்கும் ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# 85 இலட்சம் மோசடி; எட்டு வருட சிறைத்தண்டனை

■ எப். முபாரக்

கந்தளாயில் 85 இலட்சம் ரூபாயை மோசடி செய்த நபருக்கு எட்டு வருட சிறைத்தண்டனையும் எட்டு இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்து கந்தளாய் நீதிமன்ற நீதிவான் நேற்று (23) உத்தரவிட்டார்.

கந்தளாய், லைட்வீதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர், நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியான காலகட்டத்தில், டீசல், பெற்றோல் போன்ற எரிபொருட்களைப் பெற்றுத்தருவதாக கூறி, பலரிடம் 85 இலட்சம் ரூபாயை மோசடி செய்துள்ளார்.

ஓகஸ்ட் மாதம் குறித்த நபர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், குற்றம் நிரூபிக்கப்பட்டதால், சிறைதண்டனை விதித்து நீதிவான் தீர்ப்பளித்தார்.

### ஆசிரியரை தாக்கிய சம்பவம்:

# இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கண்டிப்பு

■ நிதர்சன் வினோத்



யாழ்ப்பாணத்தில் பாடசாலைக்குள் புகுந்து, ஆசிரியரை தாக்கிய சம்பவத்தை இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் வன்மையாக கண்டித்துள்ளதுடன் குறித்த சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, தாக்கிய நபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் ஜே. பொல்வின் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியர் மீது, மாணவனின் தந்தை தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பாக, மேலும் தெரிவிக்கையில், மாணவர் மீது அதிக நம்பிக்கை கொண்டு, மாணவர்களை சீராக வழிப்படுத்த கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும்போது, ஆசிரியர்கள் மீதான இத்தகைய செயற்பாடுகளை ஏற்கமுடியாது.

தற்காலத்தில் போதைப் பொருள்கள் குறித்த விழிப்புணர்வு ஆசிரியர்கள் மத்தியில் காணப்படுகின்ற காரணத்தால், கழிப்பறையில் அதிக நேரம் மாணவன் காணப்பட்டதால் சந்தேகம் கொண்டு கண்டித்த நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்றார்.

### வவுனியா நகர சபை காணிகள்

# அரசியல் கட்சிகள் சார்ந்த அமைப்புகளுக்கு தாரைவார்ப்பு

■ க. அகரன்

வவுனியா நகர சபைக்குரிய காணிகள், அரசியல் கட்சிகளை சார்ந்த சங்கங்களுக்கு எவ்வித ஒப்பந்தங்களும் இன்றி, தாரை வார்க்கப்பட்டு வருவதாக வவுனியா மாவட்ட கால்பந்தாட்ட சங்கத்தின் தலைவரும் இலங்கை கால்பந்தாட்ட சங்கத்தின் உப பொருளாளருமான அ. நாகராஜன் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் ஓட்டோ உரிமையாளர் சங்கத்துக்கு நகர சபையின் காணிகளை எவ்வித ஒப்பந்தங்களும் இன்றி வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: வவுனியா நகர சபையின் ஆதனங்கள் பரந்து காணப்படுகின்றன. இந்நிலையில், தேசிய மட்டத்தில் பல்வேறு சாதனைகளை படைத்து, சமூக நலன்கருதி செயற்பட்டு வரும் வவுனியா கால்பந்தாட்ட அணிகளை உள்ளடக்கிய வவுனியா கால்பந்தாட்ட சங்கம், இதுவரை தனக்கான கட்டட வசதியின்றி காணப்படுகின்றது.

இது தொடர்பில், வவுனியா நகர சபை தலைவருடன் கலந்துரையாடிய போது, நகர சபை காணிகளை சங்கங்களுக்கு வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார். இந்நிலையில், அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களை முன்னிலைப்படுத்திய சங்கங்களுக்கு, நகர சபையின் காணிகளை எவ்வித ஒப்பந்தங்களும் இன்றி, நகர சபை வழங்கி வருகின்றமை பக்கச்சார்பான நடவடிக்கையாகவே பார்க்கப்பட வேண்டும் எனவும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# குறிஞ்சாக்கேணி படகு விபத்தின் ஒரு வருட நினைவு

■ ஹஸ்பர்

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி இயந்திர படகு பாதை கோர விபத்து ஏற்பட்டு நேற்றுடன் (23) ஒரு வருடத்தைக் கடந்துள்ளது. 2021.11.23ஆம் திகதி ஏற்பட்ட விபத்தில், ஐந்து மாணவர்களும் மூன்று பொதுமக்களும் பலியாகினர்.

இந்த விபத்தின் இழப்புகளை நினைவுகூரும் வகையில், பெரிய கிண்ணியா ஆண்கள் பாடசாலையால் எதிர்ப்பு பேரணி ஒன்று நடத்தப்பட்டது. இப்பேரணி பாடசாலை முன்றலில் ஆரம்பித்து, குறிஞ்சாக்கேணி பாலம் வரை சென்றடைந்தது.



இப்பேரணியில், மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் கிண்ணியா பிரதேச செயலாளர் உட்பட வலயக்கல்வி பணிப்பாளர் என சுமார் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் சென்றவர்கள், பால நிர்மாண பணியைத் துரிதகதியில் முடித்துத் தருவதோடு, இரண்டு பகுதி மக்களினது போக்குவரத்தினை இலகுபடுத்தி தருமாறும் வேண்டிக் கொண்டனர். இக்கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜரும் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச் ஹனியிடம் கையளிக்கப்பட்டது.









### வர்த்தக கண்காட்சி:

## ‘சுயமாக முன்னேற முனையும் மனிதர்கள்’

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில், ‘சுயமாக முன்னேற முனையும் மனிதர்கள்’ எனும் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு, அம்பாறை மாவட்டம் முழுவதும் சிறுதொழில் முயற்சியாளர்களின் திகாமடுல்ல முயற்சியாண்மை வர்த்தக கண்காட்சி, கல்முனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலி தலைமையில் நேற்று (23) நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் வி. ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

எம்.என்.எம் அப்ராஸ்



# ஆயிரம் குழிகளைத் தோண்டிய காத்தான்குடி ஜனாசா நலன்புரி அமைப்பு

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

காத்தான்குடியில் 2013ஆம் ஆண்டு தொடங்கிய ஜனாசா நலன்புரி அமைப்பால் கப்று வெட்டுதல், ஜனாசாவுக்கான கபன் துணி வழங்குதல், ஜனாசாக்களை வைத்தியசாலைகளில் இருந்து வாகனத்தில் வீடுகளுக்கு கொண்டு போய் கொடுத்தல் போன்ற காத்திரமான மனிதநேயப் பணிகள், ஒரு ரூபாயேனும் கூலியாகப் பெறாமல் இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பணியின் ஓர் அங்கமாக ஆயிரமாவது குழி (கப்ர்) செவ்வாய்க்கிழமை இரவு (22), காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும்ஆப் பள்ளிவாயல் மைய வாடியில் தோண்டப்பட்டது.

காத்தான்குடி, புதிய காத்தான்குடி, பூநொச்சிமுனை, மஞ்சந்தொடுவாய், 19ஆம் வட்டாரம் ஆகிய பிரதேசங்களில், காத்தான்குடி ஜனாசா நலன்புரி அமைப்பின் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# சம்பூரில் மாவீரர்களுக்கு அஞ்சலி ஏற்பாடுகள்



■ அ. அச்சுதன்

திருகோணமலை, சம்பூர், ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்ல துப்புரவுப் பணி, இரண்டு வாரங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டு இருந்தபோதிலும் நேற்று முன்தினம் (22) மாவீரர்களின் பெற்றோர்கள், பொதுமக்கள் கலந்து மேலதிக பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினர் கருத்துரைக்கையில், “கார்த்திகை 26, எமது இன விடுதலைக்காய், இலட்சிய கனவுடன் தங்கள் இன்னுயிர்களை தியாகம் செய்த வீர விருட்சங்களை நினைவுகூர்ந்து, இதய அஞ்சலி செலுத்துவதற்காய் அனைவரும் ஒன்றினைய வேண்டும். அன்றைய நாளில் மாவீரர்கள் துயிலும் இல்ல வளாகத்துக்குள், கட்சி பேதம் மறந்து, இதயசுத்தியுடன் தீபமேற்றி, அஞ்சலி செலுத்துவதோடு, மாவீரர்களின் பெற்றோருக்கு உரிய கௌரவத்தையும் வெளிக்காட்ட வேண்டும்” எனவும் தெரிவித்தனர்.

### சந்தக்கவி அச்சி முஹம்மட்டுக்கு

# கரிகால் சோழன் விருது

■ வி.ரி சகாதேவராஜா



சிங்கப்பூர் முஸ்தபா அறக்கட்டளையும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இணைந்து வழங்கும் ‘கரிகால் சோழன் விருது’க்கு சம்மாந்துறையைச் சேர்ந்த சந்தக்கவி அச்சி முஹம்மட் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சந்தக்கவி அச்சி முஹம்மட் எழுதிய ‘எனது நிலமும் நிலவும் ‘ எனும் மரபுக் கவிதைத் தொகுதி நூலுக்கே இவ்வாறு ‘கரிகால் சோழன் விருது’ வழங்கப்படவுள்ளது.

இந்த விருதுவழங்கும் விழா, எதிர்வரும் திங்கட்கிழமை (28) தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

# குளிர்காயும் போது தீப்பற்றி பெண் மரணம்

■ எச்.எம்.எம் பர்ஸான்

கடும் குளிர் காரணமாக, தீ மூட்டி குளிர்காய்ந்து கொண்டிருந்த 78 வயதுடைய வயோதிப மாது, தீப்பிடித்து உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் (22) சித்தாண்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சட்டி ஒன்றில் தேங்காய் மட்டைகளை கொண்டு தீ மூட்டி, குளிர்காய்ந்து கொண்டிருந்தபோது, அப்பெண்ணின் உடலில் தீப்பரவியுள்ளது. இவ்வாறு தீக்காயங்களுக்கு உள்ளான பெண், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே மரணமடைந்துள்ளார்.

# 'மின்சாரக் கண்ணா'வுக்கு அனுதாபம்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும், முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கத்தின் மறைவுக்கு, மலையக அரசியல்வாதிகள் இரங்கல் தெரிவித்துள்ளனர்...

## செந்தில் தொண்டமான்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் போசகரும் முன்னாள் தலைவருமான முத்து சிவலிங்கம் காலமான செய்தி கேட்டு, மிகுந்த மன வேதனை அடைந்தேன்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவின் கொள்கையை ஏற்று, 1962 ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் திகதி தலவாக்கலையில் தன்னை இ.தொ.காவுடன் இணைத்துக் கொண்டார்.

மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானுடன் கைக்கோர்த்து இ.தொ.காவை வெற்றி பாதையில் செல்ல வழிகாட்டி உள்ளார். இந்நாட்டின் வளர்ச்சிக்காக பல அமைச்சு பதவிகளை வகித்து, பாரிய சேவைகளையும் முன்னெடுத்துள்ளார். எனது அரசியல் பிரவேசத்தின் போது, அவரது அனுபவங்களின் ஊடாகப் பல அரசியல் பாடங்களை கற்றுக் கொடுத்துள்ளார். அவருடைய இழப்பு இ.தொ.காவுக்கு மாத்திரமல்லாது முழு மலையகத்திற்கும் ஒரு பேரிழப்பாகும்.

## ஜீவன் தொண்டமான்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குடும்பம் ஒரு சாணக்கிய தொழிற்சங்கவாதியை இழந்துவிட்டது. இந்த இழப்பு காங்கிரஸிற்கு மட்டுமல்ல, மலையக மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 83 வருட அரசியல் மற்றும் தொழிற்சங்க வரலாற்றில், பல தசாப்த காலமாக தொழிற்சங்கம் மற்றும் அரசியல் வழிகாட்டியாக இருந்து இந்த மாபெரும் அமைப்பின் தலைவராகவும், போசகராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், மலையக மக்களின் பிரதி அமைச்சராகவும், பதவி வகித்து எம்மை வழிநடத்திய இந்த மூத்த தலைவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மருதபாண்டி ராமேஸ்வரன்



ஒரு சகாப்தம் விடைபெற்றது. உங்களோடு நான் பகிர்ந்து கொண்ட தருணங்கள் இனிமையானவை; மறக்க முடியாதவை. உங்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எமது ஸ்தாபனத்தின் மூத்த தலைவர் என்ற ரீதியில் எமக்கு வழிகாட்டியாக திகழ்ந்த அன்னாரின் இழப்பு, எமக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

1990ஆம் காலப்பகுதிகளில் இவர் பிரதியமைச்சராக இருந்தபோது, பெருந்தோட்ட மக்களின் குடியிருப்புகளுக்கு மின்சாரத்தை வழங்கி மலையகம் எங்கும் ஒளியை பரப்பினார். இதனால் மக்களால் 'மின்சார கண்ணா' என செல்லமாக அழைக்கப்பட்டார்.

மலையக மக்களின் சார்பாக வெளிநாடுகளில் இடம்பெற்ற மாநாடுகள் மற்றும் கூட்டங்களில் தொழிற்சங்க பிரதிநிதியாக சென்று அதில் கலந்து கொண்டார். அன்னாரின் இழப்பு, மலையக அரசியல் வரலாற்றில் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் என்றார்.


## வேலுசாமி இராதாகிருஸ்ணன்



மலையகத்தின் மூத்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவரும் முன்னாள் இ.தொ.கா தலைவரும் பிரதி அமைச்சரும் எனது அரசியலுக்கு வழிகாட்டியாக நின்று செயற்பட்டவருமான முத்து சிவலிங்கம் அவர்களின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கின்றேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அமரர் முத்து சிவலிங்கம் என்னை அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர். அதனை நான் என்றும் மறக்கமாட்டேன். அவர் எனக்கு பல்வேறு நிலைகளிலும் நின்று வழிகாட்டியாக செயற்பட்டவர். என்னுடைய இன்றைய இந்த அரசியல் வளர்ச்சிக்கு அவரும் ஒரு காரணகர்த்தா என்றால் அது மிகையாகாது என்றார்.

## வடிவேல் சுரேஸ்



தன்னிகரற்ற தொழிற்சங்க தலைவரும், பழுத்த நிர்வாகியும், மக்கள் நலனுக்காகவும் தொழிற்சங்கத்தின் வளர்ச்சிக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்த முத்து சிவலிங்கம் ஐயாவின் மறைவுக்கு கனத்த இதயத்தோடு துயர் பகர்கின்றேன் என்று பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஸ் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சிறிது காலமெனினும் ஐயாவின் நிழலில் தொழில் புரியும் பெரும் பாக்கியம் எனக்கு கிட்டியது. அக்கால பகுதியில் அன்னாரின் தொலைநோக்குப் பார்வையும் சிந்தனையும் என்னுள்ளும் தாக்கங்களை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது. அன்னாரின் மறைவால் துயருறும் குடும்ப உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களுக்கும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் சார்பாகவும் என் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற பிரார்த்திக்கின்றேன்.

# காட்மோரில் பணிப்பகிஷ்கரிப்பு

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா காட்மோர் தனியார் தோட்டத்தின் மூன்று பிரிவுகளைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேற்று(23) முதல் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த தொழிலாளர்களுக்கு, சில ஆண்டுகளாக அவர்களின் சம்பளத்தில் அறவிடப்பட்ட ஊழியர்கள் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் முறையாக தொழில் திணைக்களத்துக்கு அனுப்பப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையில், தங்களது ஊழியர் நம்பிக்கை நிதியம் ஊடாக கடன் பெற்றுக் கொள்ள சென்ற போது, இவ்வாறு தோட்ட நிர்வாகம் செலுத்தாமல் உள்ளமை தெரியவந்துள்ளது.




இதனால் தோட்ட முகாமையாளருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.










# வதிவிட செயலமர்வு

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் பதுளை எப். ஐ. ஓ. எச் நிறுவனத்தால் பதுளை மாவட்ட உள்ளூராட்சி மன்ற தமிழ், சிங்கள பெண் உறுப்பினர்கள் மற்றும் சமூக மகளிர் அமைப்பினர் ஆகியோருக்கான 'தலைமைத்துவம் மற்றும் பால்நிலை சமத்துவம்' என்ற தலைப்பிலான இரு தின வதிவிட செயலமர்வு, பதுளை கிராண்ட் ரீஜென்சி விடுதியில் நடத்தப்பட்டது.

(எம். செல்வராஜா)

# மாணிக்கக்கல் அகழ்ந்த 16 பேர் சிக்கினர்



ரஞ்சித் ராஜபக்‌ஷ

பொகவந்தலாவை, மஹாஎலிய வனத்தின் சுற்றாடலை அழித்து, சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஐவர் நேற்று (23) அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என ஹட்டன் வனவள அலுவலகத்தின் அதிகாரி வி.ஜி.கே. ருக்ஸான் தெரிவித்துள்ளார்.

குறித்த வனப்பகுதியில் பாரியளவில் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி, பலாங்கொடை, பொகவந்தலாவை, இரத்தினபுரி, நோர்வூட், ஹட்டன் ஆகிய பகுதிகளிலிருந்து வருகை தந்து, மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலுக்கமைய, முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர்கள் ஐவர் கைதுசெய்யப்பட்டு உள்ளதுடன், மாணிக்கக்கல் அகழ்வுக்காக பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் பொகவந்தலாவை, பலாங்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், அவர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த வனப்பகுதியில் நேற்று முன்தினமும் (22) சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் ஹட்டன், பலாங்கொடை, பொகவந்தலாவை, இரத்தினபுரி, நோர்வூட் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் இவர்கள் பலாங்கொடை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# 5 மாதங்களின் பின் மண்ணெண்ணெய்

ஆ.ரமேஸ்

ஐந்து மாதங்களின் பின்னர், நேற்று (23) உடபுஸ்ஸலாவை நகரில் உள்ள சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்து மண்ணெண்ணெய் கிடைத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் கடந்த ஐந்து மாதங்களாக இப்பிரதேச மக்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. இதன் காரணமாக மண்ணெண்ணெய் பாவனையாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர்.

இந்த நிலையில் நேற்று (23) பகல் 6,600 லீட்டர் மண்ணெண்ணெய் கிடைத்ததாக குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் தெரிவித்தார்.




# தமிழ்மொழி கற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்

என்.ஆராச்சி

புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவிலிருந்து உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள இளைஞர், யுவதிகளுக்காக நடத்தப்படும் தமிழ் மொழி கற்கையை மேற்கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது 40 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டதுடன், இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் ரம்யா ஜயசுந்தர கலந்துகொண்டார்.



# அப்பகிரன்லியில் வீடு முற்றாக எரிந்தது

துவாரகஷான்


அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அப்பகிரன்லி தோட்டத்தில் நேற்று முன்தினம் (22) மாலை 4.30 மணியளவில் ஏற்பட்ட தீயால் வீடொன்று முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது.

திடீரென இரண்டு குடியிருப்பு பகுதியில் இருந்து புகை கிளம்பியதை பிரதேச மக்கள் கண்டுள்ளதுடன், உடனடியாக செயற்பட்டு தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதன் போது வீட்டிலிருந்த சொத்துகளும் தீயில் கருகியுள்ளதுடன், மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் உள்ளிட்டவையும் எரிந்துள்ளன.

இவ்விபத்தில் 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்டவர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணையை அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# இதயசுத்தியுடன் களத்தில் இறங்குவதற்கான காலம் கனிந்துள்ளது

இறுதியாக, 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்து, ஒரேயொரு தேசிய பட்டியலின் ஊடாக பாராளுமன்றத்துக்குள் பிரவேசித்து, பிரதமராகி, ஜனாதிபதியாகியிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவின் மீதான வசைபாடல்களுக்கு இன்னுமே குறைவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற சமாதான பேச்சுவார்த்தையின் போது, 'ரணில் நரி' என்றே அழைத்தனர். அவ்வமைப்பைச் சின்னா பின்னமாக்க முக்கிய 'மூளை'யாக இருந்து செயற்பட்டார் என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

அரசியலில் அவிழ்க்க முடியாத முடிச்சுகளைப் போட்டுவிட்டு, காலத்தை இழுத்தடித்து, பிரச்சினையையே மறக்கடிக்கச் செய்வதில் அவருக்கு நிகர் அவரே! கட்சிக்குள்ளும் பல்வேறான முடிச்சுகளைப் போட்டு, தலைமைப் பதவியை சதாகாலத்துக்கும் தக்கவைத்துக்கொண்டிருப்பவர்!

இவ்வாறானவர்தான், நாடு மிகவும் நெருக்கடியான நிலைமைக்குகள் விழுந்துகிடக்கின்ற நிலைமையில், சவால்களுக்கு முகங்கொடுத்து, முன்னகர்த்திக்கொண்டு செல்கின்றார். அவருடைய கரங்களைப் பலப்படுத்த வேண்டுமென தெரிவிக்கும் ஆளும் கட்சியினர், முக்கியமான தருணங்களில் காலை வாரிவிடாது கைகொடுக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்டவர்கள் பதவிகளில் இருக்கும் போதே, இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணாவிடின், எதிர்காலத்தில் அது இலகுவான விடயமாக இருக்காதென பலரும் கூறக் கேள்விப்பட்டிருக்கின்றோம்.

இந்நிலையில்தான், ஒவ்வொருவருடைய மனத்திலும் என்ன இருக்கிறது என்பதைச் சுரண்டிப் பார்க்கும் வகையில், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக, அதிகாரப்பகிர்வை வழங்குவது தொடர்பிலான சம்மதத்தை பாராளுமன்றத்தில் நேற்று (23) கேட்டார். ஆனால், எதையும் இனவாதக் கண்ணோட்டத்தோடு பார்க்கும் தரப்புகளைச் சார்ந்தவர்களின் பெயர்களை கூறியழைத்துக் கேட்கத் தவறிவிட்டார்.

தனது பக்கத்திலும், வரிசையிலும் இருந்த பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ ஆகியோரிடமும் நேரடியாகக் கேட்டிருந்தால், அதிலொரு வெளிப்படை இருந்திருக்கும். ஏனைய கட்சித் தலைவர்கள், தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகளிடமும் கேட்கவில்லை.

அதனால்தான் என்னவோ, சர்வதேசத்தை ஏமாற்றும் இரண்டாவது நாடகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரப் பகிர்வின் ஊடாக ஆரம்பித்துள்ளார் என, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் (ஜே.வி.பி) பகிரங்கமானதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மூவினங்களும் ஓரணியில் திரண்டிருந்தால், நாட்டை வெகுசீக்கிரமாக கட்டியெழுப்பலாம். தேர்தல்கள் காலங்களில் இன, மத ரீதியில் குரோதங்கள் விதைக்கப்பட்டதன் விளைவால், ஒவ்வொருவரிடத்திலும் நம்பிக்கையின்மை, விசுவாசமின்மை ஆழமாகப் பதிந்துவிட்டது. எனினும், நாடு பொருளாதார ரீதியில் சிக்கித்தவிக்கும் இக்காலத்தில், இவையெல்லாம் மறந்துவிடப்பட்டுள்ளன.

புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் கிடைக்குமா என்பது சந்தேகமே! ஆகையால், ஒவ்வொரு தரப்பும் இதயசுத்தியுடன் களத்தில் இறங்குவதற்கான காலம் கனிந்துள்ளது.

தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்



இளம் வயதில் இருந்தே தங்களைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். எவையெவை நல்லவை, எவற்றை நிராகரிக்கக்கூடாது என்பதை அறிந்து கொள்வதற்கு, உணர்வுபூர்வமாக அறிய முயல வேண்டும்.

இந்த விடயத்தில், பிள்ளைக்ளுக்கு வழிகாட்டி – உருவாக்கி, மேன்மக்களாக்குவதில் பெற்றோரின் பங்களிப்பு முக்கியமானது. பிள்ளைகளை வளர்த்து ஆளாக்குவதே பெரிய கலை. அன்பைக் காட்டுவத மட்டுமல்ல; அவர்கள் செய்யும் தவறுகளைப் பக்குவமாகவும் எடுத்துச்சொல்ல வேண்டும்.

இன்றையகால புதிய தலைமுறையினர், பற்பல கேள்விகளைக் கேட்ட வண்ணம் இருப்பார்கள். ஆனால், அறிவுத் துறையில் அவர்களுக்கு அபரிமிதமான ஞானம் உண்டு.

காலத்தின் தேவைகள், நேரத்தின் பெறுமதிகளை உணர்த்த வேண்டும். உலகத்துக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்கின்ற பரந்த நோக்கத்தை, சிறுவயதிலேயே கதைகளாகக் கூறி, ஊட்ட வேண்டும்.

இல்லங்களுடன் கூடியவையே அகிலமாகும். ஒவ்வொருவரும் தமது இல்லைத்தைப் பராமரித்தால், நாடு வெளிச்சத்துடன் பிரகாசிக்கும். பலர் ஒன்றுசேர்ந்து வையகத்தை உருவாக்க வேண்டும். வேற்றுமைகளை முழுமையாக அகற்ற வேண்டும். உலகத்தின் சிற்பிகள், பிள்ளைகள் என்பதை யாவரும் உணர்ந்து செயற்படுக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழ்க் கட்சிகளை நோக்கி ரணில் அடித்த பந்து



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில், அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றாக இணைந்து வந்தால், பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். இதன்மூலம், தமிழ்க் கட்சிகளை நோக்கி, பேச்சுவார்த்தை என்கிற பந்தை, ரணில் உதைத்திருக்கின்றார்.

இந்தப் பந்தை தமிழ்க் கட்சிகள் தங்களுக்கிடையில் எப்படி வெற்றிகரமாக கையாண்டு, ரணிலுக்கு எதிராக கோலாக மாற்றப் போகின்றன என்பதுதான் இப்போதிருக்கும் கேள்வி.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதை, தென்இலங்கையின் ஆட்சித் தரப்புகள் எப்போதும் விரும்புவதில்லை. 'ஒரே இலங்கை; ஒரே ஆட்சி; பௌத்தத்துக்கு முதலிடம்' என்பனதான், தென்இலங்கையின் ஒற்றை நிலைப்பாடு. இதைக் கேள்விக்குள்ளாக்கும் எந்த முன்முயற்சிகளையும், முளையிலேயே கிள்ளி எறிந்துவிட நினைப்பார்கள்.

சர்வதேச ரீதியில் இலங்கை மீது பாரிய அழுத்தங்கள் ஏற்பட்டாலன்றி, உள்ளக இன முரண்பாடுகள் குறித்தோ, தமிழ் மக்களுக்கான அரசியல் அதிகாரங்கள் குறித்தோ, தென் இலங்கை ஆட்சியாளர்கள் சிந்திக்கத் தலைப்பட்டதில்லை.

சர்வதேச அழுத்தம் அல்லது போர் முனையில் பின்னடைவு ஏற்பட்ட தருணங்களில், சமாதானப் பேச்சு என்கிற உத்தியைப் பயன்படுத்தி, நெருக்கடிகளில் இருந்து ஆட்சியாளர்கள் தப்பித்திருக்கிறார்கள். மற்றப்படி, தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றிய பேச்சுகள் எழுவதைக்கூட, அவர்கள் விரும்புவதில்லை.

இதற்கு தென்இலங்கையை ஆண்ட எந்தவோர் அரசியல் தலைவரும் விதிவிலக்கில்லை. டி.எஸ் சேனநாயக்கா தொடங்கி இன்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க வரையில் இதுதான் நிலைமை.

இப்படியான நிலைமையில், தமிழ்க் கட்சிகள் எல்லாமும் இணைந்து ஒன்றாக வந்தால், அரசாங்கம் பேச்சுக்கு தயார் என்பது, இலகுவாகத் தப்பிக்கும் ரணிலின் உத்தியாகும்.

இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடித்திருக்கின்ற பந்தானது, தமிழ்க் கட்சிகள் என்கிற பொதுப் பரப்பை நோக்கி அடிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்பட்டாலும், அது உண்மையில், தமிழ்த் தேசிய கட்சிகளை நோக்கி அடிக்கப்பட்ட பந்தாகும்.

ஆட்சியில் பங்கெடுத்திருக்கின்ற டக்ளஸ் தேவானந்தாவின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியோ, சிவநேசதுரை சந்திரகாந்தனது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளோ அரசாங்கத் தரப்பில் இருக்கக் கூடியவை. இவை, அரசியல் தீர்வு தொடர்பில் அக்கறை கொண்ட தரப்புகள் அல்ல. இந்தக் கட்சிகளின் அதிகபட்ச இலக்கு, பிரதேச அபிவிருத்தி என்பதுதான். அதற்கு ஆட்சியில் பங்காளியாக இருக்க வேண்டுமென்பது, இவர்களின் அரசியல் சித்தாந்தம்.

ஆனால், தமிழ்த் தேசிய கட்சிகளின் அரசியல் என்பது, தமிழ் மக்களின் அரசியல் தீர்வு என்கிற ஒற்றைப் புள்ளியைச் சார்ந்திருப்பது. அதுதான் அடிப்படை. அந்த அடிப்படைக்கு அப்பால் நின்று சிந்திக்க முடியாது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்போ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ, சி.வி விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியோ எதுவாக இருந்தாலும், அரசியல் தீர்வு பற்றி சிந்தித்து செயலாற்றியாக வேண்டும். ஆனால், இந்தக் கட்சிகள் எல்லாமும் ஒன்றுக்கொன்று, நேரெதிரான செயற்பாட்டு நிலைகளைப் பேணுபவையாகக் காணப்படுகின்றன.

குறிப்பாக, கூட்டமைப்பு மக்களை காட்டிக் கொடுப்பதாக கூறிக் கொண்டே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி களம் கண்டது. அதுபோல, கூட்டமைப்பை எதிர்த்து விக்னேஸ்வரன் களம் கண்ட போது, ஒரு கட்டத்தில் அவரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரித்தது. அடுத்த சில மாதங்களில், முன்னணியும் விக்னேஸ்வரனும் முட்டிக்கொண்டு, தனித்தனியாகக் களம் கண்டன.

அது மாத்திரமன்றி, தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு உள்ளேயே, மூன்று பங்காளிக் கட்சிகளும் முரண்பாடுகளின் உச்சத்தின் நின்று மோதிக் கொள்கின்றன. இப்படியான நிலையில், தமிழ்த் தேசிய கட்சிகள், அதன் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று ஒவ்வொரு தரப்பும், நவக்கிரகங்கள் போன்று முகங்களை எதிர்த்திசையில் திருப்பிக் கொண்டிருக்கின்றன.

அரசியல் தீர்வு குறித்து பேச்சு நடத்த, கூட்டமைப்பின் தலைவராக இரா. சம்பந்தன் அழைப்பு விடுத்தாலே, டெலோவும் புளொட்டும் வருவதில்லை. தமிழரசுக் கட்சியின் தலைவரே, "சம்பந்தனின் அழைப்பை கருத்தில் எடுக்கத் தேவையில்லை; யாரும் பேச்சுக்கு வர வேண்டாம்" என்று பங்காளிக் கட்சிகளிடம் அறிவிக்கின்றார்.

அப்படியான நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கூட்டமைப்புடன் இணைந்து, பேச்சு மேசைக்கு கொண்டுவந்து சேர்ப்பது என்பது, நினைத்துக்கூடப் பார்க்க முடியாத காரியம்.

அடிப்படையில், தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்களாக இருக்கின்றவர்கள், தங்களை முன்னிறுத்துவதைத் தாண்டி, எதையும் செய்வதற்குத் தயாராக இருப்பதில்லை. இவர்களைத் தாண்டி, கட்சிகளைத் தாண்டி, தமிழ் மக்களுக்கான தீர்வு, அவசியமும் அவசரமுமானது என்பதுதான் நிலைமை.

ஆனால், தன்னால் முடியாது என்றால், மற்றவர்களாலும் எந்த அதிசயமும் நிகழ்ந்துவிடக் கூடாது என்கிற மனநிலை, தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள், முக்கியஸ்தர்களாக இருக்கின்றவர்கள் அனைவரிடத்திலும் வந்துவிட்டது.

ஒன்றாகக் கூடி, ஒன்றாக முடிவெடுத்து, மக்களிடம் அறிவித்துவிட்டு, அந்த நிலைப்பாடுகளுக்கு எதிராக, தனிப்பட்ட நலன்களை முன்னிறுத்தி இயங்கும் அரசியல்வாதிகளை, எந்தவொரு தரப்பினாலும் திருத்திவிட முடியாது. அவர்களைத் தேர்தல் என்கிற புள்ளியில் வைத்து, மக்கள் தோற்கடித்து வெளியேற்றினால் அன்றி, இவர்களை நேர்படுத்துவது என்பது இயலாத காரியமாகும்.

அரசியல் ஆர்வலர்கள், கட்சி அபிமானிகள், புத்திஜீவிகள் தொடங்கி யார் யாரோவெல்லாம், "தமிழர் நலனை முன்னிறுத்திய நிலைப்பாடுகளுக்கு ஒன்றிணைந்து வாருங்கள்" என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி விட்டார்கள்.

ஆனால், அவற்றையெல்லாம் இந்த அரசியல் தலைவர்கள் ஒருபோதும் கேட்டுக் கொண்டதில்லை. விமர்சனங்களை அவர்கள் தனிப்பட்ட ரீதியில் எடுத்துக்கொள்வதோடு, விடயத்தை கடந்துவிடுகிறார்கள்.

எம்.ஏ சுமந்திரனோ, சி.வி விக்னேஸ்வரனோ, கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ பாராளுமன்றத்துக்குள் இனி, தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான பேச்சுகளை அரசாங்கம் நடத்த வேண்டும் என்று அழைக்க முடியாது. ஏனெனில், அதற்கான பதிலை ஏற்கெனவே ரணில் வழங்கிவிட்டார்.

பாராளுமன்றத்துக்குள், ஹன்சாட்டில் பதியப்படும் உரைகளை மாத்திரம் நிகழ்த்துவதோடு பணி முடிந்துவிட்டதாக, தமிழ்க் கட்சிகளின் தலைவர்களோ முக்கியஸ்தர்களோ விலக முடியாது.

ரணில் இப்போது அடித்திருக்கின்ற பந்து கூட்டமைப்பையோ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையோ அல்லது இன்னொரு தமிழ்த் தேசிய கட்சியையோ நோக்கித் தனித்து அடிக்கப்பட்டதில்லை. மாறாக, அனைவரையும் நோக்கி அடிக்கப்பட்டு இருக்கின்றது.

> **ரணில் இப்போது அடித்திருக்கின்ற பந்து கூட்டமைப்பையோ, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையோ அல்லது இன்னொரு தமிழ்த் தேசிய கட்சியையோ நோக்கித் தனித்து அடிக்கப்பட்டதில்லை. மாறாக, அனைவரையும் நோக்கி அடிக்கப்பட்டு இருக்கின்றது.**
> **இதனை, யாரும் தனித்துக் கையாளவும் முடியாது; தவிர்க்கவும் முடியாது. அப்படி நடந்து கொண்டுவிட்டு, மீண்டும் பாராளுமன்றத்துக்குள் நின்று, அரசியல் தீர்வு தொடர்பில் நீண்ட உணர்ச்சிபூர்வ உரைகளை நிகழ்த்த முடியாது. அதனால், பலனும் இல்லை.**

இதனை, யாரும் தனித்துக் கையாளவும் முடியாது; தவிர்க்கவும் முடியாது. அப்படி நடந்து கொண்டுவிட்டு, மீண்டும் பாராளுமன்றத்துக்குள் நின்று, அரசியல் தீர்வு தொடர்பில் நீண்ட உணர்ச்சிபூர்வ உரைகளை நிகழ்த்த முடியாது. அதனால், பலனும் இல்லை.

அப்படியான நிலையில், ரணிலின் பந்தை அனைத்து தமிழ்க் கட்சிகளும் தலைவர்களும் தங்களுக்கிடையிலான தனிப்பட்ட தன்முனைப்பு, காழ்ப்பு மனப்பான்மைகளைக் கடந்து நின்று கையாள வேண்டும். அதன்மூலமே ரணிலின் தந்திரத்தை கடக்க முடியும்.

தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றும் இப்போது தனி நாட்டுக் கோரிக்கையோடு இல்லை. தேர்தல் மேடைகளில் கூட, சமஷ்டி தீர்வு என்ற நிலையைத் தாண்டி அவர்கள் பேசுவதில்லை.

வேறு விடயங்களில் அதீத உணர்ச்சிவசப்பட்ட உரைகளை நிகழ்த்தினாலும், தீர்வு விடயத்தில் சமஷ்டி என்ற புள்ளியை தாண்டுவதில்லை. அப்படியான நிலையில், தங்களுக்கு இடையில் சமஷ்டித் தீர்வு தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தி, எழுத்து வடிவிலான இணக்கத்தை தமிழ்க் கட்சிகள் காணுவதற்கு முயல வேண்டும்.

அதன்போது, சந்தர்ப்பங்களைக் கையாளும் உத்தி, இராஜதந்திர நோக்கு பற்றியெல்லாம் சிந்தித்து செயலாற்ற வேண்டும். அதன்மூலம், தேர்தல்களில் மோதிக் கொண்டாலும், தமிழ்த் தேசியத்தின் பெயரால் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற கட்சிகளாக அவை நடத்து கொள்ள வேண்டும்.

அதுதான், ரணிலுக்கு எதிராக கோல் அடிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதற்கான முதற்படி. அது நிகழவில்லை என்றால், தீர்வு குறித்த அதிசயம் நிகழ்வதற்கான வாய்ப்புகளை, முளையிலேயே கிள்ளுவது போன்றதாகும்.

## கடிதங்கள்

மட்டக்களப்பு – திருகோணமலை

### பிரதான வீதியின் அவலநிலை



மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியின் அவலநிலை கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகத் தொடர்ந்து நிலவுகின்றது. தற்போது மழைக்காலம் ஆரம்பித்து விட்டிருக்கும் நிலையில், ஏறத்தாள இரண்டு கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரம், குறிப்பாக வாகரை பிரதான வீதி, நீர் நிறைந்த குன்றும் குழிகளுமாகக் காட்சிதருகிறது.

கிழக்கு மாகாணத்தின் தலைநகர் திருகோணமலைக்கு, மட்டக்களப்பிலிருந்து இலகுவாகச் செல்லும்கூடிய ஒரே பாதை இதுதான். திருகோணமலையில் இருந்தும் மட்டக்களப்பில் இருந்தும் அரச அலுவல்கள், மற்றும் முக்கிய அலுவல்களின் நிமித்தம், அதிகாரிகள் தினமும் பயணிக்கும் பாதையாகவும் இந்தப்பாதை காணப்படுகின்றது. அதிகாரிகள், தினமும் இந்தப் பாதையைப் பார்த்துக் கொண்டும் இதன் அவலத்தை அனுபவித்துக் கொண்டும் தானே செல்கின்றார்கள்?

அவசரமாக செல்வதாக இருந்தால், இப்பாதையால் பயணிக்கத்தான் முடியுமா? இலங்கையில் இப்படியும், இதுபோலும் ஒரு பிரதான பாதை இருக்கின்றது என்று சொல்ல முடியுமா? சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு....

வி.ரி சகாதேவராஜா



## கலைஞர்கள் கௌரவிப்பு

கிழக்கு மாகாணக் கலாசார திணைக்களம் நடத்திய கிழக்கு மாகாணக் கலைஞர்களை கௌரவிக்கும் விழா, திருகோணமலை விவேகானந்தா கல்லூரி கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.இ.எம்.டபிள்யூ. ஜி. திசாநயக்க தலைமையில் நடைபெற்ற இந்தக் கௌரவிப்பு விழாவுக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். (அபு அலா)





















## இலக்கிய விழாவும் சிறப்பு மலர் வெளியீடும்

மட்டக்களப்பு மாவட்டம், மண்முனை தென்எருவில் பற்று பிரதேச கலாசார, இலக்கிய விழாவும் 'எழுவான்' சிறப்பு மலர் வெளியீடும் மிகவும் பிரமாண்டமான முறையில், கோலாகலமாக செவ்வாய்கிழமை (22) களுதாவளையில் நடைபெற்றது.

(வ. சக்தி)







## சேவை பாராட்டு

புத்தளம் இந்து மத்திய கல்லூரியில் 33 வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியையான தனலட்சுமி சிவலிங்கத்தின சேவையைப் பாராட்டும் வைபவமும் மலர் வெளியீடும் அதிபர் பீ.ஆர். தம்பிதுரை தலைமையில் நடைபெற்றது.

(எம்.யூ.எம் சனூன்)



# மீண்டும் உதயநிதி ஸ்டாலின்



திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணியின் செயலாளராக உதயநிதி ஸ்டாலினை மீண்டும் நியமித்து, கழகத்தின் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுருப்பதாவது;

தி.மு.க இளைஞரணிச் செயலாளராக உதயநிதி ஸ்டாலின் மீண்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் துணை செயலாளர்களாக பிரகாஷ், பிரபு, சீனிவாசன், பிரதீப் ராஜா, ஆனந்த்குமார் ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தி.மு.க மகளிரணி தலைவியாக விஜயா தாயன்பனும், செயலாளராக ஹெல்ன் டேவிட்சனும், இணைச் செயலாளராக குமரி விஜயகுமார் ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளது.

## டுவிட்டர்: 'தமிழ்' சர்ச்சையில் சிக்கிய குஷ்பு

அண்மையில் காசியில் 'தமிழ்ச் சங்கமம்' நடத்தப்பட்டது. இதில் இந்திய பிரதமர் மோடி, இசையமைப்பாளர் இளையராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் போது உரையாற்றிய இளையராஜா, காசியில் தமிழ்ச் சங்கமம் நடத்தியதற்காக பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்திருந்தார்.






இந்நிலையில், கடந்த 20 ஆம் திகதி நடிகையும், பாரதிய ஜனதா கட்சியின் தமிழக நிர்வாகியுமான குஷ்பூ, டுவிட்டரில் இது குறித்து பதிவு ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அதில், 'இன்று உலகளவில் தமிழ் மொழியை அறியச் செய்ததற்கும், தமிழருக்கு கிடைக்கும் மரியாதைக்கும், தமிழ் கலாசாரம் இரு மடங்கு உயர்ந்துள்ளதற்கும் முக்கிய காரணம் பிரதமர் மோடிதான் என்றும், இதற்கு நாங்கள் எப்போதும் கடமைப்பட்டுள்ளோம். உங்களை பின்பற்றுபவர்களாக அல்ல; ஒரு தமிழனாக' எனக் குறிப்பிட்டு, மிக்க நன்றி! தமில் வாழ்க, தமில் மொழி வாழ்க!" என்று பதிவிட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த பதிவில் 'தமிழ்' என்பதற்குப் பதிலாக 'தமில்' எனக் குஷ்பு குறிப்பிட்டிருந்ததைக் கவனித்த பலரும், குஷ்பூ மற்றும், பா.ஜ.கவினர் தமிழைத் தொடர்ந்து புறக்கணித்து வருவதாகக் குற்றம் சாட்டினர்.

இதனையடுத்து தனது தவறை அறிந்த குஷ்பூ, மீண்டும் ஒரு டுவிட்டில் அதை சரி செய்து, மன்னிப்பு கேட்டிருந்தார். எனினும் 'மன்னிப்பு' என்ற வார்த்தையிலும் எழுத்துப்பிழை இருந்ததால் அவரை பலரும் 'ட்ரோல்' செய்து வருகின்றனர்.

## கட்டார்: FIFA உலகக் கோப்பை: கலக்கும் நாமக்கல் முட்டை



கால்பந்து ரசிகர்களின் மிகுந்த எதிர்ப்பார்ப்புக்கு மத்தியில் FIFA உலகக்கோப்பைத் தொடரானது கடந்த 20ஆம் திகதி கட்டாரில் கோலாகலமாக ஆரம்பமானது.

உலகம் முழுவதிலும் இருந்து 32 நாடுகளின் அணிகள் பங்கேற்றுள்ள இத்தொடரானது, டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் உலகம் முழுவதும் இருந்து இப்போட்டியைக் காணப் பல இலட்சக்கணக்கான ரசிகர்கள் கட்டாரில் குவிந்துள்ளதால் அங்கு முட்டையின் தேவை அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதையடுத்து நாமக்கல்லில் இருந்து கட்டாருக்கு ஏற்றுமதி செய்யப்படும் முட்டையின் எண்ணிக்கை ஒன்றரைக் கோடியாக அதிகரித்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் 1,000க்கு மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ள நிலையில், அங்கு உற்பத்தி செய்யப்படும் முட்டைகள் தமிழகம் மட்டுமின்றி வெளிமாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

குறிப்பாக சவுதி அரேபியா, ஈரான், ஈராக், ஓமான், பஹ்ரைன், மாலைத்தீவு ஆகிய நாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## சென்னை: 'பிராங்க்' செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை

'பிராங்க்' வீடியோக்களால் பாதிக்கப்படும் பொதுமக்கள் புகார் அளித்தால், சம்பந்தப்பட்ட யூடியூப் சனல் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என, சென்னை மாநகர பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

சென்னையைச் சேர்ந்த ரோகித் குமார் என்ற இளைஞர், அண்மையில் 'பிராங்க்' வீடியோக்கள் வெளியிடும், 5 யூடியூப் சனல்கள் மீது, மத்திய குற்ற பிரிவில் புகார் அளித்திருந்தார்.

இப்புகாரின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட யூடியூப் சனல்களின் உரிமையாளர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டு விசாரணை நடத்தி, பல்வேறு



அறிவுரைகள் வழங்கி எச்சரித்து அனுப்பியதாகப் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இனி வரும் காலங்களில் 'பிராங்க்' வீடியோவால் பொதுமக்கள் பாதிக்காத வகையில் பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்றும், புகார் அளிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட யூடியூப் சனல்கள் மீது வீடியோவின் தன்மைக்கு ஏற்ப, கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் சென்னை பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

## கேரளா: 30,000 மாணவர்களின் தகவல்கள் திருட்டு

கேரளாவில் உள்ள கண்ணூர் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் சுமார் 30,000 மாணவர்களின் தனிப்பட்ட தகவல்கள் திருடப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்தில் 2018 ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை கல்வி கற்ற மாணவர்களின் தகவல்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு திருடப்பட்ட தகவல்களை ஹேக்கர்கள், 'டார்க் வெப்' எனப்படும் இணையதளத்தில் வெளியிட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

இதனை கொச்சியில் உள்ள தனியார் சைபர் செக்யூரிட்டி ஏஜென்சி கண்டறிந்துள்ளது.

இந்நிலையில் பல்கலைக்கழக இணையதளத்தில் ஏற்பட்ட பிழையின் காரணமாக, இத்தகவல் திருட்டு நடைபெற்று இருக்கலாம் என குறித்த பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## புதுடெல்லி: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் கொலை: மகன் கைது

புதுடெல்லியில் இளைஞர் ஒருவர் தனது குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரைப் படுகொலை செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் (22) இரவு குறித்த நபரின் வீட்டிலிருந்து பயங்கர அலறல் சத்தம் கேட்டு, அயலில் வசிப்பவர்கள், குறித்த வீட்டுக்குச் சென்று பார்த்த போது, அங்கு மூன்று பெண்கள், ஓர் ஆண் என நான்கு பேர் படுகொலை செய்யப்பட்டு இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்துள்ளனர்.

இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த அயலவர்கள், பொலிஸாருக்குப் தெரியப்படுத்தியுள்ளதோடு, தப்பியோட முயன்ற இளைஞரையும் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில், பொலிஸாரின் விசாரணையில், கேசவ் என்ற 25 வயதான இளைஞர், மறுவாழ்வு மையத்தில் சிகிச்சை பெற்று, சில தினங்களுக்கு முன்புதான் தனது குடும்பத்தினருடன் மீண்டும் இணைந்துள்ளார். சம்பவ




தினத்தன்று, மதுபோதையில் தனது குடுப்பத்தாரிடம் பணம் கேட்டு தகராறில் ஈடுபட்டுள்ளார். அவர்கள் பணம் கொடுக்க மறுத்ததால், ஆத்திரத்தில் தனது தந்தை, தாய், பாட்டி, தங்கை ஆகியோரை கத்தியால் குத்தி கொடூரமாகக் கொலை செய்துள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.



உலகக் கிண்ணம்:

# சவுதியிடம் ஆர்ஜென்டினா அதிர்ச்சி தோல்வி

கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில், நேற்று முன்தினம் (22) மாலை நடைபெற்ற தரவரிசையில் 51ஆம் இடத்திலுள்ள சவுதி அரேபியாவுடனான குழு சி போட்டியில் தரவரிசையில் மூன்றாமிடத்திலுள்ள ஆர்ஜென்டீனா 1-2 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது.

ஆர்ஜென்டீனா சார்பாகப் பெறப்பட்ட கோலை லியனல் மெஸ்ஸி பெற்றதோடு, சவுதி சார்பாக சாலே அல்ஷெஹ்ரி, சலீம் அல்டவஸிறி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து சவுதியில் நேற்று (23) விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற டென்மார்க், துனீஷியாவுக்கிடையிலான குழு டி போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினமிரவு நடைபெற்ற போலந்து, மெக்ஸிக்கோவுக்கிடையிலான குழு சி போட்டியும் 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதேவேளை, நேற்று அதிகாலை நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான குழு டி போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பிரான்ஸ் வென்றிருந்தது. பிரான்ஸ் சார்பாக, ஒலிவியர் ஜிரூட் இரண்டு கோல்களையும், அட்ரியன் றபியொட், கிலியான் மப்பே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். அவுஸ்திரேலியா சார்பாகப் பெறப்பட்ட கோலை கிறேய்க் குட்வின் பெற்றிருந்தார்.

இந்நிலையில், இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஜி போட்டியில் சுவிற்ஸர்லாந்தும், கமரூனும் மோதவுள்ளதுடன், மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு எச் போட்டியில் தென்கொரியாவை உருகுவே எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 9.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு எச் போட்டியில் போர்த்துக்கல்லும், கானாவும் மோதவுள்ளன. தவிர, நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சேர்பியாவை பிரேஸில் எதிர்கொள்ளவுள்ளது.

ஒவ்வொரு 11 நிமிடத்துக்கும்

# ஒரு பெண் கொலை

“உலகில் ஒவ்வொரு 11 நிமிடத்துக்கும் ஒரு பெண் அல்லது சிறுமி அவருடைய காதலன் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொல்லப்படுகிறார்” என ஐ.நாவின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கவலை தெரிவித்துள்ளார்.


பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் வரும் 25 ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையை எடுக்க வேண்டிய நேரமிது.


மேலும் இதுபோன்ற வன்முறைகளை வரலாற்று புத்தகங்களில் ஏற்றவேண்டும். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை என்பது உலகின் மிகப் பரவலான மனித உரிமை மீறலாக மாறியுள்ளது.

ஒவ்வொரு 11 நிமிடத்துக்கும் ஒரு பெண் அல்லது சிறுமி அவருடைய காதலன் அல்லது குடும்ப உறுப்பினர்களால் கொலை செய்யப்படுகின்றாள். கொரோனா பாதிப்பு முதல் பொருளாதார சரிவு வரையிலான தாக்கங்கள், தவிர்க்க முடியாத வன்முறைகளையும், வாக்குவாதங்களையும் அதிகரிக்க வழிவகுத்துள்ளன.

இதில் பெண்கள் மற்றும் சிறுமிகள் வெறுப்பு பேச்சு, பாலியல் ரீதியில் மற்றும் இணையவழியில் என பலவகை துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர். பெண்களின் அடிப்படை உரிமைகள், சுதந்திரம், சமமான பொருளாதார மீட்சி, உலகின் தேவையான நீடித்த வளர்ச்சி ஆகியவற்றையும் இந்த வன்முறைகளும், பாகுபாடும் தடுக்கின்றன. இவற்றுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய நேரமிது” இவ்வாறு தெரிவித்துள்ளார்.





## வாயைப் பிளக்க வைக்கும் பிகோல்ட்

பிரான்ஸில் அண்மையில் பிரித்தானியர் ஒருவரால் சுமார் 30 கிலோ கிராம் எடைகொண்ட கோல்ட் ஃபிஷ் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய மனிதர்களின் உயரம் கொண்ட இம் மீனின் புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது.




## 15 ஆண்டுகளில் 31 பெண்கள் பாலியல் வன்கொடுமை


அவுஸ்திரேலியாவில், கடந்த 15 ஆண்டுகளில் 31 பெண்களைப் பாலியல் வன்கொடுமை செய்த கீத் சிம்ஸ் என்ற குற்றவாளியை, 40 ஆண்டுகளுக்குப் பின்னர் டீ.என்.ஏ சோதனை மூலம் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

ஆரம்பத்தில் இக் குற்றங்கள் தனித்தனியாக விசாரிக்கப்பட்டாலும் கூட, 2001ஆம் ஆண்டு, 12 பாதிக்கப்பட்ட நபர்களின் டி.என்.ஏ சோதனை முடிவுகள் ஒரே மாதிரியானவை என்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், ஏனைய 19 சம்பவங்களையும் பொலிஸார் இதனுடன் இணைத்தனர்.

இதனைத் தொடர்ந்து 2019ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புலனாய்வாளர்கள், பொலிஸ் தரவுத்தளத்தில் இது தொடர்பான டி.என்.ஏ பொருத்தத்தைக் கண்டுபிடித்தனர். இது சந்தேகத்துக்குரிய எண்ணிக்கையை 324 பேராகக் குறைத்தது.

இதனையடுத்து ஒருவழியாகக் கடந்த செப்டெம்பரில், சிம்ஸிடமிருந்து ஏற்கெனவே இருந்து எடுக்கப்பட்டிருந்த டி.என்.ஏ மாதிரி, பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து எடுக்கப்பட்டவற்றுடன் சரியான பொருத்தமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் கீத் சிம்ஸ் தான் குற்றவாளி என்று கண்டுபிடிக்கப்பட்டாலும், அவர் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் உயிரிழந்துவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



## யுனைட்டெட்டை விட்டு வெளியேறும் ரொனால்டோ

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தமது முன்களவீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, கழகத்தை விட்டு வெளியேறவுள்ளதாக இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

நேர்காணலொன்றில் இம்மாதம் யுனைட்டெட்டின் முகாமையாளர் எரிக் டென் ஹக்கை தான் மதிப்பதில்லை என ரொனால்டோ குறிப்பிட்டிருந்தார்.

கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் யுனைட்டெட்டில் மீண்டும் ரொனால்டோ இணைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கடந்த 2003ஆம் ஆண்டு தொடக்கம் 2009ஆம் ஆண்டு வரையிலும் யுனைட்டெட்டுக்காக விளையாடிய ரொனால்டோ, மொத்தமாக 346 போட்டிகளில் 145 கோல்களைப் பெற்றிருந்தார்.



எருவில் கண்ணகி விளையாட்டு கழக கிரிக்கெட் தொடர்:

## சம்பியனான களுவாஞ்சிக்குடி மக்ஸ் விளையாட்டுக் கழகம்

அஸ்ஹர் இப்றாஹிம்

எருவில் கண்ணகி விளையாட்டுக் கழகம் நடத்திய கிரிக்கெட் தொடரில் களுவாஞ்சிக்குடி மக்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

எட்டு ஓவர்கள் கொண்ட இத்தொடரின் இறுதிப் போட்டியில் றொபின் விளையாட்டுக் கழகத்தை வென்றே மக்ஸ் சம்பியனானது.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய றொபின் விளையாட்டுக் கழகம், 8 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு, 49 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய துடுப்பெடுத்தாடிய மக்ஸ் விளையாட்டுக் கழகம் 7.3 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்து இவ்வாண்டு 12ஆவது தடவையாக சம்பியனானது.

நியூசிலாந்து கிரிக்கெட் சபையின்

## மத்திய ஒப்பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்ட கப்தில்

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டவீரரான மார்டின் கப்தில், அவரது மத்திய ஒப்பந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக நியூசிலாந்து கிரிக்கெட் சபை நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

36 வயதான கப்திலாலேயே வேறு இடங்களில் விளையாடும் வாய்ப்புகளை தேடுவதற்காக ஒப்பந்தத்திலிருந்து விடுவித்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டதாக கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், தொடர்ந்தும் கப்தில் தெரிவு செய்யப்படலாம் என அவருக்கு சபை, அறிவுறுத்தியுள்ளது.




## டுவிட்டர், மெட்டா, அமேசான் வரிசையில் இணைந்த கூகுள்

அண்மைக்காலமாக வருவாயை அதிகரிக்கும் நோக்கில் உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களான டுவிட்டர், முகநூலின் மெட்டா, அமேசான் நிறுவனங்கள், தங்கள் ஊழியர்களை பணிநீக்கம் செய்யும் பணியை தொடங்கியுள்ளன. அந்த வரிசையில் தற்போது கூகுள் நிறுவனமும் இடம்பெறவுள்ளது.

செயற்பாடு திறன் குறைவாக உள்ள ஊழியர்களை பணிநீக்கம் செய்யும் பணியை கூகுள் நிறுவனம் தொடங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. அடுத்தாண்டு தொடக்கத்தில் புதிய செயற்றிறன் மேலாண்மை திட்டத்தை கூகுள் நிறுவனம் அறிமுகப்படுத்தவுள்ளது.

இதன்மூலம் குறைவான செயற்றிறன் உள்ள ஊழியர்களை கண்டறிந்து அவர்களை பணிநீக்கம் செய்ய திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. அந்தவகையில் கூகுள் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களில் செயற்றிறன் குறைவாக உள்ள சுமார் 10,000 பேர் வேலையிழக்க நேரிடும் என கணிக்கப்பட்டுள்ளது.




## 4 கால்களில் நடக்கும் மாணவர்களால் பரபரப்பு

சீனாவில் பாடசாலை மற்றும் கல்லூரிகளில் மாணவர்கள் விலங்குகள் போன்று 4 கால்களில் நடந்து செல்லும் காணொளிகள் இணைத்தில் வைரலாகி வருகின்றன.

இந்நிலையில் மாணவர்கள் இவ்வாறு நடந்து செல்வதற்கான காரணம் தற்போது வெளியாகியுள்ளது.

சீனாவில் இவ்வாறு விலங்குகள் போன்று நடந்து செல்வது ஒரு தனித்துவமான பயிற்சி எனவும் இது நாற்கர இயக்கம் என அழைக்கப்படுவதாகவும், இது மனித பரிணாமக் கோட்பாட்டை மறுபரிசீலனை செய்ய மக்களைத் தூண்டுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்கள் அவர்களது அனைத்து உறுப்புகளையும் பயன்படுத்தி ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு செல்வது உடலுக்கு நன்மை பயக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 24 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.